

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ.வின் மூத்த சகோதரர் மறைந்த க.சண்முகம் உடலுக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அமைச்சர் ஆர்.காந்தி, கதிர்ஆனந்த் எம்.பி., சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, ஏ.சி. வில்வநாதன், மு.பெ.கிரி உள்ளிட்ட கழக முன்னோடிகளும் அஞ்சலி செலுத்தினர்.

### காஷ்மீரத்தின் உரிமைகளுக்காக போராடி வரும்

# பரூக் அப்துல்லாவிற்கு பிறந்த நாள் வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 22–

ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:–



ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் பரூக் அப்துல்லா அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

காஷ்மீரத்தின் உரிமைகளும் தன்னாட்சியும் சிதைக்கப்பட்டு வருவதற்கு எதிரான காஷ்மீரினது குரலின் அடையாளமாக பரூக் அப்துல்லா அவர்கள் போராடி வருகிறார்.

அவர் மகிழ்ச்சியோடும், நல்ல உடல் நலத்தோடும், நீண்ட ஆயுளோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர்

# க.தேவராஜியின் மூத்த சகோதரர் க.சண்முகம் மறைவு!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – ஆர்.காந்தி – கழகத்தினர் அஞ்சலி!

திருப்பத்தூர், அக். 22–

திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. மூத்த சகோதரரும், கொத்த கோட்டை ஊராட்சி, செக்கு மேடு கிராமம் மு.கிளை கழக செயலாளருமான க.சண்முகம் அக். 19 ஆம் தேதி இயற்கை எய்தினார் அவரது மறைவிற்கு பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர், எ.வ.வேலு, ஜவுளி அமைச்சர், இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி ஆகியோர் நேரில் வந்து மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்கள் அ. நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் மற்றும் மாவட்ட துணை செயலாளர் டி.கே.மோகன், மாவட்டப் பொருளாளர் கே.பி.ஆர். ஜோதிராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் மு. அசோகன், சாமுவேல்செல்லப் பாண்டியன், திருப்பத்தூர் நகர செயலாளர், எஸ்.ராஜேந்திரன், வாணியம்பாடி மேற்கு நகர பொறுப்பாளர் கயாஸ்அஹமது, ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.தாமோதிரன், ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி. அன்பு, ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் க.உமாகன்ரங்கம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய செயலாளர் கே.சதிஷ்குமார், கந்திலி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.முருகேசன், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர் கவிதாதண்டபாணி, கந்திலி தெற்கு ஒன்றிய செயலாளர் டி.அசோக்குமார், கந்திலி கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் அ.மோகன்ராஜ்,

திருப்பத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.ராஜேந்திரன், ஆலங்காயம் பேரூர் செயலாளர் ம.ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர் சு.அரசு, ஏஜாஸ்அகமது, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் டி.சந்திரசேகர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வீ.வடிவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசரதன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன், ஆலங்காயம் ஒன்றியக்குழுத் தலைவர் சங்கிதா பாரி, திருப்பத்தூர் ஒன்றியக் குழு தலைவர் விஜயா அருணாசலம் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி வைத்து ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 243 வது நாள்!

## திரு.வி.க நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,அக்.22-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 243 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு (20.10.2025) அன்று, திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 74 அ, சந்தர யோகி சமாதி சாலை, வட்டக் கழக அலுவலகம் அருகில் பெரம்பூர், 2) வட்டம் 71, ஜட்ஜ் பரமசிவம் தெரு, பெரம்பூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு/ தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா. பி.தாஸ், எஸ்.வெங்கடேசன், இத்திட்ட ஒருங்கிணைப் பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# "களத்தில் நம் அரசு" திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் தீவிரம்!

திருவாரூர், அக்.22-

தமிழ்நாட்டில் வேக மெடுக்கும் வடகிழக்கு பருவமழை தீவிரமாகும் நிலையில், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் "களத்தில் நம் அரசு" என்கிற மக்களுக்கு நம்பிக்கையூட்டும் திட்டங்களால் பருவமழை பாதிப்புக்களில் இருந்து மக்களையும் ,கால்டைகளையும், விவசாயத்தையும் காக்கும் வகையில் அரசு எந்திரங்களை மக்களோடு நிற்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்.

இந்த நிலையில் திருவாரூர் மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் கொடுக்கப்பட்டிருக்கும் நிலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட கழகச்செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் ஆலோசனைகளின்படியும், மாவட்டம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் தலைமையிலான அரசுநிர்வாகம் மக்கள் பாராட்டும் வகையில் திறம்பட பணியாற்றிவருகிறது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும் விபரங்கள் அனைத்தும் பேரிடர் மேலாண்மை நிர்வாகம் மூலம், பொதுமக்களுக்கு அவ்வப்போது செய்திமக்கள்தொடர்புத்துறை தகவல்களும் தெரியப்படுத்தி வருகிறது.கழக அரசின் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களை பீதிகளை இருந்து காப்பற்றும் விதமாகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகவும் அமைந்திருப்பது பாராட்டும்விதமாக அமைந்துள்ளது. வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், அரசுத்துறை அதிகாரிகள் இவர்களுடன் மக்கள் பிரதிநிதிகள், கழக தோழர்களும் பருவமழை முன்னெச்செரிக்கை நடவடிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.



மாவட்டத்தில் 176 பகுதிகளில் வெல்ல பாதிப்பு இருக்கலாம் என கண்டறியப்பட்டு கண்காணிக்கப் படுகிறது. 20 மருத்துவக்குமுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீட்பு பணிகளுக்கு என 327 ஜெசிபிக்களும்,322ஜெனரேட்டர்களும் ,352 மின் மோட்டார்களும், 586 மரம் அறுக்கும் கருவிகளும், 39 படகுகளும்தயார்நிலையில் உள்ளன. 34000 மணல் மூட்டைகளும் தயாராக உள்ளன.

இந்த நிலையில் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தேர்வு நிலை பேரூராட்சி பகுதியில் குடவாசல் ரோடு, கும்பகோணம் ரோடு, செட்டி தெரு, மாரியம்மன் கோவில், கைலாசநாதர் தெற்கு வீதி, ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கிய பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் கொண்டு மழைநீர் வடிய வைக்கப்பட்டது

நல்லமாங்குடி வடக்கு தெரு மற்றும் வார்டு எண் 6 சன்னாநல்லூர் பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் வெட்டி வடியப்பட்டது மற்றும் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டு உள்ளது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப்பட்டு வருகிறது .வார்டு 8 சவுக்கத்தெரு பகுதியில் ஜேசிபி மூலம் மழைநீர் வடிய வைக்கும் பணி நடைபெற்றது.

கூத்தாநல்லூர் வட்டம்,45.கிளியனூர் வருவாய் கிராமம், சோழாட்சி உட்கிராமத்தில் இன்று 21 102025. காலை 8:45 மணியளவில் அறுந்து விழுந்த மின் கம்பிகள் . உடனதியாக மின்சார வாரியம் மூலம் சரி செய்யப்பட்டது.

நன்னிலம் பேரூராட்சியில் வார்டு எண் 5 சன்னாநல்லூர் தூத்துக்குடி தார் தொட்டி தெரு பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் ஜே சி பி மூலம் வெட்டி வடியப்பட்டது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப்பட்டது .

குடவாசல் பேரூராட்சி பகுதியில் அத்திக்கடை சமத்துவபுரம் மற்றும் பிடாரி கோயில் தெரு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீர் வடிய வைக்கும் பணி நடைபெற்றது .

நன்னிலம் பேரூராட்சியில் வார்டு எண் 5 சன்னாநல்லூர் தூத்துக்குடி தார் தொட்டி தெரு பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் ஜே சி பி மூலம் வெட்டி வடியப்பட்டது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப்பட்டது

குடவாசல் வட்டம், அகர ஓகை கிராமம், வலங்கைமான் மெயின் ரோட்டில் சாலை ஓரத்தில் சாய்ந்துள்ள மரம் வெட்டும் பணி தொடர்பாக அந்தப் பகுதிக்கு செல்ல மின் நிறுத்தம் செய்யப்பட்டதை உறுதி செய்து வட்டாட்சியரால் ஆய்வு செய்யப்பட்டது

நன்னிலம் வட்டம், முடிகொண்டான் கிராமத்தில் சகடமங்கலம், கருப்பூர், பொறக்குடி, போலகம் உள்ளிட்ட கிராம மக்கள் பயன்படுத்தும் இரயில்வே கீழ்பாலம் ஆய்வு செய்யப்பட்டது.

மன்னார்குடி வட்டம் தலையாமங்கலம் கிராமம் ஆதிதிராவிடர் தெருவில் சூழ்ந்திருந்த மழை நீர் ஊரக வளர்ச்சித் துறையின் ஒருங்கிணைப்புடன் வெளியேற்றப்பட்டது. அப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டது.

முத்துப்பேட்டை வட்டம் பாண்டி ஊராட்சி சிவன் கோயில் தெரு மழை நீர் வடிகால் சீரமைத்தல் மற்றும் சிவன் கோவில் தெரு மேலத் தெரு ஆகிய சாலை ஓர கருவேல் மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

குடவாசல் வட்டம் உத்தரங்குடி கிராமம் கோனாற்றில் ஆகாயத்தாமரை அடைக்கப்பட்டது புது பொதுப்பணித்துறை மற்றும் பொதுமக்களுடன் சேர்ந்து அகற்றப்பட்டது .திருவாரூர் வட்டம் திருவாரூர் நகரம் அழகிரி காலணியில் குடியிருப்புகளை சுற்றி தேங்கி இருந்த நீரை வெளியேற்றப்பட்டது

மழைவெள்ள பாதிப்புகளுக்கு உதவிகோரிட மாவட்ட நிர்வாகம், 9043989192, 9345640279 , 04366 226623 , 04366 1077 உள்ளிட்ட தொலைபேசி எண்களையும், திருவாரூர் நகராட்சிக்கு 8300899655, 04366242205 உள்ளிட்ட எண்களையும் பொதுமக்களுக்கு கொடுத்துள்ளது.


மூன்றாம் ஆண்டு

நினைவு அஞ்சலி

நாள் : 22.10.2025 புதன்கிழமை



நினைவில் வாழும் டாக்டர். ரவி பெருமாள் M.B.B.S.,D.Ortho.,
தலைமை மருத்துவர்
காமராசர் அரசு மருத்துவமனை சிதம்பரம், கடலூர், மாவட்டம்
(தோற்றம் : 11.11.1965 மறைவு : 22.10.2022)

தீராத நினைவுகளுடன்

செ.பெருமாள் Ex.,MLA.,
காட்டுமன்னார்கோயில் சட்டமன்றத் தொகுதி கடலூர் மாவட்டம்

திருமதி. தனமணி பெருமாள்

டாக்டர். பெரு.ராஜசேகரன் | டாக்டர். பெரு.மணமல்லி

பொறியாளர். பெரு.செந்தில்குமார் M.E.,

Dr.P.R.அன்புராஜ் | Dr.P.R.ராஜ்குமார்

நினைவுகளுடன்...

டாக்டர். பெரு.வெற்றிகுமார்
தலைவர் – மருத்துவர் அணி ,சென்னை கிழக்கு மாவட்டம்,எழும்பூர்
தவைவர்– அறங்காவலர் குழு , புரசைவாக்கம் கங்காதரேசுவரர் திருக்கோயில்.

Sheela Ortho Clinic Chidambaram,Sheela Dental Clinic Kattumannar koil.